## சுருக்கம்

சட்டக் கல்வி – 2018–ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் வியன்னாவில் நடைபெறும் சர்வதேச மாதிரி நீதிமன்றப்போட்டிகளில் கலந்து கொள்வற்காக தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில் பயின்று வரும் 5 மாணவர்களுக்கு தலா ரூ.75,000/–வீதம் மொத்தம் ரூ.3,75,000/– நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## சட்ட (சக)த்துறை

அரசாணை (நிலை) எண்.99

நாள் 12.03.2018.
ஹேவிளம்பி வருடம் – மாசி –28.
திருவள்ளுவர் ஆண்டு 2049.

படிக்கப்பட்டது:

பதிவாளர்(பொ), தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித எண்.225/பதிவாளர்/கல்வியியல்/A3/2018, நாள் 21.02.2018.

* * * * *

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பதிவாளர்(பொ), தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அவர்கள், 2018–ஆம் ஆண்டு மார்ச் 22 முதல் 29 வரை வியன்னா, ஆஸ்திரியாவில் நடைபெறவுள்ள "25th Annual Willem C. Vis International commercial Arbitration Moot-2018" பன்னாட்டு மாதிரி நீதிமன்றப் போட்டியில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகத்தின், சீர்மிகு சட்டப்பள்ளியின் சார்பாக பங்குகொள்ள, அப்பல்கலைக்கழகத்தின் 5 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அவர்களின் பெயர்களை அரசுக்கு சமர்ப்பித்து, தலா ரூ.90,739/– (ரூபாய் தொண்ணூறாயிரத்து எழுநூற்று முப்பத்து ஒன்பது) வீதம் அவர்களுக்கு நிதி ஒப்பளிக்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பதிவாளர்(பொ), தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அவர்களின் கோரிக்கையினை கவனமுடன் பரிசீலித்த அரசு, அதனை ஏற்று, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில் பயின்று வரும் கீழ்க்கண்ட ஐந்து மாணவர்களுக்கும், 2018–ஆம் ஆண்டில், மார்ச் மாதத்தில் வியன்னாவில் நடைபெறவுள்ள சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்து கொள்ள மாணவர் ஒருவருக்கு தலா ரூ.75,000/– (ரூபாய் எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) வீதம் மொத்தம் ரூ.3,75,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்)–ஐ ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடுகிறது:-

| வ. எண் | பெயர் | வகுப்பு |
|---|---|---|
| 1 | K. சிந்தன் | 5 ஆம் ஆண்டு பி.ஏ.பி.எல். (சீர்மிகு) |
| 2 | R. கிருபா சங்கரி | 5 ஆம் ஆண்டு பி.ஏ.பி.எல். (சீர்மிகு) |
| 3 | Va. ராமலிங்கம் | 3 ஆம் ஆண்டு எல்.எல்.பி.. (சீர்மிகு) |
| 4 | சஹானா விஸ்வேஸ்வரன் | 5ஆம் ஆண்டு பி.ஏ.பி.எல். (சீர்மிகு) |
| 5 | [illegible] | [illegible] |

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

"2202-பொதுக்கல்வி – 03. பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் – 102. பல்கலைக்கழகங்களுக்கு நிதி உதவி – மாநிலச் செலவினங்கள் – AM. சட்டப் பல்கலைக் கழகம், சென்னை – 09. உதவித்தொகை – 01. நடப்புச் செலவுக்கான உதவித்தொகை (து.தொ.கு. 2202–03–102–AM-0910)".

4. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான போதிய நிதி ஒதுக்கம் 2017–2018– ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழக பதிவாளர்(பொ), அவர்களுக்கு காசோலை வாயிலாக இதனைப் பெற்று அளித்திடுவதற்கு சட்டக்கல்வி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேற்சொன்ன உரிய தொகையினை பெற்று வழங்கியபின், போட்டிக்குச் சென்று வந்த மாணவர்களின் செலவுச் சீட்டு பட்டியை (Bills) அப்பல்கலைக்கழகத்திடமிருந்து பெற்று சரிசெய்யுமாறு சட்டக்கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5.போட்டியில் கலந்து கொண்ட பின், மேற்சொன்ன மாணவர்களிடமிருந்து அப்போட்டியின் உபயோகம் குறித்தான அறிக்கையினை பெற்று அரசுக்கு தவறாமல் அனுப்பிவைக்குமாறு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழக பதிவாளர் (பொ) அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6.இவ்வாணை நிதித்துறையின் இசைவினை, அ.சா.எண்.3128/உள்–II/2018, நாள் 12.03.2018–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.ச.பூவலிங்கம்,
அரசு செயலாளர்.

பெறுநர்:

1. பதிவாளர்(பொ), தமிழ்நாடு டாக்டர்அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம், சென்னை – 600 028.
2. சட்டக் கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010.
3. தனி நபர்கள் (பதிவாளர்(பொ), தமிழ்நாடு டாக்டர்அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் வழியாக).
4. சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 600 035.
5. மாநில கணக்காய்வாளர், சென்னை – 600 018/600 035.

நகல்:

1. நிதி (உள்–II)த்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
2. இருப்பிட தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

இருப்பு கோப்பு/ உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.